SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் மாசி 19 ஹிஜிரி 1446 ரமலான் 2

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews
● புதுச்சேரி ● திங்கள்கிழமை, மார்ச் 3, 2025 RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 227 ● 8 பக்கம் ● ரூ.6

## சீமான் மீதான வழக்கின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது சுப்ரீம் கோர்ட்

**புதுடெல்லி, மார்ச் 3-**

நாம்தமிழர்கட்சியின்தலைமைஒருங்கிணைப்பாளர் சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக வளசரவாக்கம் போலீசில் நடிகை விஜயலட்சுமி புகார் செய்தார். அதன்பேரில் சீமான் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை கடந்த 17ந்தேதி விசாரித்த நீதிபதி, கற்பழிப்பு வழக்கை ரத்து செய்ய முடியாது என்றும், இந்த வழக்கை 12 வாரத்துக்குள் போலீசார் விசாரித்து முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். இதற்கிடையே ஐகோர்ட்டு உத்தரவுக்கு எதிராக சீமான் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், 'இந்த விவகாரத்தில் முன்வைக்கப்பட்ட வாதங்களையும், அனைத்து அம்சங்களையும் முறையாக கருத்தில் கொள்ளவில்லை. தன் மீதான வழக்கை ரத்து செய்ய மறுத்த ஐகோர்ட்டு உத்தரவை ரத்துசெய்ய வேண்டும். இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்து தீர்ப்பு கூறும் வரையில், 12 வாரங்களுக்குள் புலன்விசாரணையை போலீசார் நடத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும்' என கூறப்பட்டு உள்ளது.

இந்நிலையில், சீமான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனு சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது சீமான் தரப்பின் ஆஜரான வழக்கறிஞர் வாதிடுகையில், "நடிகை ஏற்கெனவே 3 முறை வழக்கை திரும்ப பெற்றுள்ளார். புதிய அரசு பொறுப்பேற்றவுடன் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மீண்டும் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், புலன் விசாரணை தொடரட்டுமே என்று கூறியதுடன்,இழப்பீடு வழங்க ஏதேனும் வாய்ப்புள்ளதா என கேள்வியெழுப்பினர். இழப்பீடு தொடர்பான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக சீமான் தரப்பின் தெரிவிக்கப்பட்டது. இதனை பரிசீலித்த நீதிபதிகள், இந்த வழக்கில் எதிர்மனுதாரர் பதிலளிக்க வேண்டும் என்று கூறியதுடன், வழக்கு தொடர்பான விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர். அத்துடன், இரு தரப்பும் பேசி தீர்வு காண 2 மாதங்கள் அவகாசமும் வழங்குவதாக தெரிவித்தனர்.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த உத்தரவின் மூலம், சென்னை ஐகோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் சீமான் மீது வளசரவாக்கம் போலீசார் நடத்திய விசாரணைக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உத்தரவு சீமான் தரப்புக்கு சாதகமாக பார்க்கப்படுகிறது.

## நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, மார்ச் 3-**

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. வட்டியுடன் சேர்த்து ரூ. 9.39 கோடியை வசூலிக்க ஜகஜால கில்லாடி படத்தின் அனைத்து உரிமைகளையும் தனபாக்கியம் நிறுவனத்திற்கு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும், நடிகருமான துஷ்யந்த் மற்றும் அவரது மனைவி அபிராமி பங்குதாரராக இருக்கும் ஈசன் புரொடக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் நடிகர் விஷ்ணு விஷால் மற்றும் நிவேதா பெத்துராஜ் நடிப்பில் உருவான "ஜகஜால கில்லாடி" என்ற படத்தை தயாரித்தது.

இந்தப் படத்தை தயாரிக்க தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திடம் இருந்து ரூ. 3 கோடியே 74 லட்சம் கடன் பெற்று இருந்தனர். கடன் ஒப்பந்தத்தின் படி இந்த கடனை ஆண்டுக்கு 30 சதவீதம் வட்டியுடன் திருப்பி அளிப்பதாக உறுதியளித்து இருந்தனர். எனினும்,இந்த கடனை திருப்பி அளிக்காததை தொடர்ந்து இந்த விவகாரத்தில் தீர்வு காணும் வகையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ரவீந்திரன் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். மத்தியஸ்தராக இருக்கும் ஓய்வு பெற்ற நீதிபதி இந்த விவகாரத்தை விசாரித்து, கடன் பாக்கி தொகை வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயை வசூலிக்க ஏதுவாக "ஜகஜால கில்லாடி" படத்தின் மொத்த உரிமைகளையும் தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஒப்படைக்க கடந்த ஆண்டு 2024ம் ஆண்டு மே மாதம் உத்தரவிட்டு இருந்தார். இந்த உரிமைகளை பெற்றுக்கொண்டு விற்று அந்த கடன் தொகையை ஈடு செய்ய வேண்டும் என்றும் மீதித் தொகையை ஈசன் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என்றும் மத்தியஸ்தர் உத்தரவிட்டு இருந்தார். உத்தரவின் படி படத்தின் உரிமையை ஒப்படைக்கும் படி தனபாக்கியம் என்டர்பிரைசஸ் நிறுவனம் கேட்டது. எனினும், படத்தின் பணிகள் முழுமை பெறவில்லை என்பதால் அதனை ஒப்படைக்க முடியாது என்று ஈசன் புரொடக்ஷன்ஸ் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து மத்தியஸ்தர் உத்தரவை அமல்படுத்தும் வகையில் ராம்குமார் தந்தையான சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்து புதிய ஏலம் நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரி தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் தற்போது வரை கடன் தொகையில் 9 கோடியே 39 லட்சத்து 5 ஆயிரத்து 43 ரூபாய் வசூலிக்க வேண்டியுள்ளதாக தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் தெரிவித்து இருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அப்துல், "இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்வதற்கு ஈசன் புரொடக்ஷன்ஸ் சார்பில் அவகாசம் கோரப்பட்டது. எனினும், இதுவரை பதில் மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இதனால் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இது குறித்து சம்பந்தப்பட்ட சார்பதிவாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கின் அடுத்த விசாரணை மார்ச் 5ம் தேதி நடைபெற உள்ளது.

## தமிழகம், புதுவையில்
# பிளஸ்2 பொதுத்தேர்வுகள் தொடங்கியது

### ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது நடவடிக்கை -தேர்வுத்துறை எச்சரிக்கை



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறுவதையொட்டி பொய்கை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி.

**சென்னை, மார்ச் 3-**

பிளஸ் 2 வகுப்பு மாணவ, மாணவியருக்கான பொதுத்தேர்வு இன்று தொடங்கியது. இந்த தேர்வில் தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 8 லட்சத்து 21 ஆயிரம் மாணவ, மாணவியர் பங்கேற்றுள்ளனர். தேர்வு மார்ச் 25ம் தேதி வரை நடக்கிறது. இதற்காக தமிழகம் புதுச்சேரியில் 3316 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 10 மற்றும் மேனிலை வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச், ஏப்ரல் மாதங்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு மார்ச் 3ம் தேதி பிளஸ் 2 வகுப்புக்கான தேர்வு தொடங்கும், 5ம் தேதி பிளஸ் 1 வகுப்புக்கான தேர்வு தொடங்கும் என்றும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஏற்கெனவே அறிவித்து இருந்தது.

அதற்கேற்ப இன்று பிளஸ் 2 வகுப்புக்கான தேர்வுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. மார்ச் 25ம் தேதி தேர்வுகள் முடிகிறது. முன்னதாக பிளஸ் 2 வகுப்புக்கு பிப்ரவரி 2ம் தேதி முதல் 14ம் தேதி வரையும், பிளஸ் 1 வகுப்புக்கு பிப்ரவரி 15ம் தேதி முதல் 21ம் தேதி வரையும் செய்முறைத் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பிளஸ் 2 தேர்வில் தமிழகம் புதுச்சேரியில் 7518 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவியர் மற்றும் தனித் தேர்வர்கள் என 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 மாணவ, மாணவியர் இந்த தேர்வில் பங்கேற்க பதிவு செய்துள்ளனர். மேற்கண்டவர்களில் 3 லட்சத்து 78 ஆயிரத்து 545 பேர் மாணவர்கள், 4 லட்சத்து 24 ஆயிரத்து 23 பேர் மாணவியர். சிறைவாசிகள்145 பேர் எழுத உள்ளனர்.

இதற்காக தமிழகம், புதுச்சேரியில் 3316 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்வறைக் கண்காணிப்பு பணியில் 43 ஆயிரத்து 446 ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். 4470 பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. பிளஸ்1 மற்றும் பிளஸ் 2 தேர்வுகளில் 20 ஆயிரத்து 476 மாற்றுத் திறன் கொண்ட மாணவ, மாணவியருக்கு மொழிப்பாடத் தேர்வில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் தேர்வை எழுத ஒரு மணி நேரம் கூடுதல் சலுகையும் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு எழுத வரும் மாணவர்கள் எலக்ட்ரானிக் பொருட்கள், செல்போன் எடுத்து செல்ல தடை செய்யப்பட்டிருந்தது. தேர்வு எழுத வரும் மாணவ, மாணவியர் முன்னதாக 9 மணி அளவில் தேர்வு அறை உள்ள பள்ளி வளாகத்துக்கு வர வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.


ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடும் மாணவ மாணவியர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் அடுத்த சில ஆண்டுகள் தேர்வு எழுத முடியாத வகையில் தண்டனைகளும் வழங்கப்படும் என்று தேர்வுத்துறை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இன்று தேர்வு தொடங்குவதை அடுத்து, தடையில்லா மின்சாரம் வழங்க மின்சாரத் துறைக்கும், தேர்வுப்பணிகளுக்கு பாதுகாப்பு வழங்க காவல் துறைக்கும், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் மூலம் அறிவுரைகளை பள்ளிக் கல்வித்துறையும், தேர்வுத்துறையும் வழங்கி உள்ளன.


புகார்கள் தெரிவிக்க தொலைபேசி எண்கள் தேர்வு எழுதும் மாணவர்கள் காலை 10மணிக்கு தேர்வு அறைக்குள் வந்ததும் விடைத்தாள் வழங்கப்படும். அதன் முகப்பு பக்கத்தில் மாணவர்கள் தங்கள் விவரங்களை எழுதும் வகையில் 5 நிமிட நேரம் வழங்கப்படும். பின்னர் கேள்வித்தாள் வழங்கப்படும்.

கேள்வித்தாள் படித்துப்பார்க்க 10 நிமிட நேரம் ஒதுக்கப்படும். மாணவர்கள், பொதுமக்கள் தேர்வு தொடர்பான தங்கள் புகார்கள் மற்றும் கருத்துகளையும், சந்தேகங்களையும் தெரிவிக்க வசதியாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் முழுநேர தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

தேர்வு நாட்களில் ஒவ்வொரு நாளும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இந்த கட்டுப்பாட்டு அறை செயல்படும். புகார்கள் தெரிவிக்க விரும்புவோர், 9498383075, 9498383076 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கிர் தேசிய பூங்காவை பார்வையிட்டார் பிரதமர் மோடி





**புதுடெல்லி, மார்ச் 3-**

பிரதமர் நரேந்திர மோடி கிர் வனவிலங்கு சரணாலயத்தின் தலைமையகமான சாசனில் நடைபெறும் தேசிய வனவிலங்குகள் வாரிய கூட்டத்திற்கு தலைமை தாங்குவது உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக குஜராத் வந்தடைந்தார்.

இந்நிலையில், கிர் தேசிய பூங்காவை பிரதமர் நரேந்திர மோடி பார்வையிட்டார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

கிர் தேசிய பூங்காவில் உள்ள சிங்கங்களை பார்வையிட்ட பிரதமர், தன்னுடைய கேமராவில் சிங்கங்களை படம் பிடித்தார்.

முன்னதாக பிரதமர் மோடி புகழ்பெற்ற வழிபாட்டுத் தலமான சோம்நாத் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். பிரதமர் மோடி ஸ்ரீ சோம்நாத் அறக்கட்டளையின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது

# மாற்றுத்திறனாளிகள் நலன் கருதி சிறப்பு மருத்துவ முகாம் நடத்த உத்தரவிட்ட முதல்வர்

## வேலூர் மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



**வேலூர், மார்ச் 3-**

வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி கொண்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் நலத்திட்டங்களும் சென்றடைய 19 அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்த முகாம்கள் ஒற்றை சாளர முறையில் (Single Window Approach) வட்டார வாரியாக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

இம்முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை (UDID), பராமரிப்பு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, வங்கி கடன் மானியம், உதவி உபகரணங்கள். வருவாய் துறை மூலமாக வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, உழவர் பாதுகாப்பு அட்டை, ஊரக வளர்ச்சித்துறை மூலமாக வழங்கப்படும் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் முழு ஊதியத்துடன் கூடிய நூறு நாள் வேலை அட்டை பதிவு, கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் விலையில்லா வீடு வழங்கும் திட்டம், மருத்துவத் துறையின் மூலம் இலவச பஸ்பாஸ் மற்றும் இரயில்வே பாஸ் பதிவு செய்தல், மாவட்ட தொழில்மையம் மூலமாக வழங்கப்படும் பாரத பிரமரின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் மத்திய அரசின் வேலையில்லா படித்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) போன்ற திட்டங்களின்கீழ் கடன் வழங்குதல், தாட்கோ மூலமாக வங்கி கடன், கூட்டுறவு வங்கியின் மூலமாக வங்கி கடன் பெறுதல் (NHFDC), முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் அடையாள அட்டை பதிவு மேற்கொள்ளுதல் ஆகிய பல்துறை அரசின் நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரே இடத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, அணைக்கட்டு, அணைக்கட்டு வட்டாரம் அகரம், வேலூர், குடியாத்தம், கணியம்பாடி, கீ.வ.குப்பம் ஆகிய வட்டாரங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு முகாம் நடத்தப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பேர்ணாம்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன் தொடங்கி வைத்தனர்.

நடைபெற்ற முகாமில் பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளிலிருந்து 593 மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு அரசின் அனைத்து துறைகளின் சேவைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் கோரி மனு அளித்தனர். இவற்றில் 110 மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சான்றிதழுடன் கூடிய தேசிய அடையாள அட்டைகளும், 98 மாற்றுத்திறனாளிகளுக்கு ஹிஞிமிஞி அடையாள அட்டை பதிவுகளும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,09,000 வீதம் என மொத்தம் ரூ.3,27,000 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட 3 பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.9,800 மதிப்பிலான சக்கர நாற்கலியும், 32 மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்தில் இலவச பயணத்திற்கான அட்டைகளும், 32 மாற்றுத்திறனாளிகளுக்கு தொடர்வண்டியில் இலவச பயணத்திற்கான அட்டைகளும், சக்கர நாற்காலி, பேட்டரியால் இயங்கும் நாற்காலி, காதொலிக்கருவி போன்ற உபகரணங்களை கோரி 40 பேருக்கு ALIMCO- Artificial Limbs Manufactuing Corporation Of india திட்டத்தின்கீழ் பதிவு என 276 மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் “நிறைந்தது மனம்“ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து துறைகள் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம் குறித்து செய்தியாளர்களிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

நிறைந்தது மனம் நிகழ்ச்சி வாயிலாக மாவட்ட வருவாய் அலுவலர் இம்முகாம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஜீன் 2024 இல் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக் கூட்டத்தொடரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்களையும், பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்று அரசின் திட்டங்களால் பயனடைந்து வரும் பொதுமக்களிடம் நேரடியாக கருத்துகளைக் கேட்டு அவ்விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்கிறார்கள் என்றும், முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் இந்நிகழ்ச்சிக்கு “நிறைந்தது மனம்“ என பெயரிட்டு செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சிறப்பு முகாம் குறித்த விவரங்களும், இம்முகாம்களின் மூலம் பயனடைந்த மாற்றுத்திறனாளிகளின் அனுபவங்களும் செய்தியாளர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி கொண்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு அரசின் நலத்திட்டங்களும் சென்றடைய 19 அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்த முகாம்கள் ஒற்றை சாளர முறையில் (Single Window Approach) வட்டார வாரியாக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 7 வட்டாரங்களில் காட்பாடி வட்டாரத்தில் 24.01.2025 அன்றும், அணைக்கட்டு வட்டாரத்தில் 05.02.2025 மற்றும் 12.02.2025 ஆகிய 2 நாட்களிலும், வேலூர் வட்டாரத்தில் 07.02.2025 அன்றும், குடியாத்தம் வட்டாரத்தில் 14.02.2025 அன்றும், கணியம்பாடி வட்டாரத்தில் 20.02.2025 அன்றும், கீ.வ.குப்பம் வட்டாரத்தில் 21.02.2025 அன்றும் என ஏற்கனவே 7 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் இதுவரை நடைபெற்றுள்ள 7 முகாம்களில் 4504 மனுக்கள் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இவற்றில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2506 மனுக்கள் பெறப்பட்டு 2101 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் 695 மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டைகளும், 798 மாற்றுத்திறனாளிகளுக்கான UDID அடையாள அட்டை பெறுவதற்கு பதிவுகளும், 558 மாற்றுத்திறனாளிகளுக்கு பேருந்து மற்றும் இரயிலில் இலவச பயணத்திற்கான ஆணைகளும், 24 மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கி கடனுதவிகளும், 20 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,15,000 மதிப்பிலான சக்கர நாற்காலிகளும், 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.4,07,200 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும் வழங்கப்பட்டுள்ளது. இதர மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டு அம்மனுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் பயனடைந்த மாற்றுத்திறனாளிகள்










தெரிவித்ததாவது, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பரவக்கல் கிராமத்தை சார்ந்த மாற்றுத்திறனாளி பிரபாவதி தெரிவித்ததாவது. பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், பரவக்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னால் முதுகு தண்டுவட பாதிப்பின் காரணமாக நடக்க இயலாது. 4 மாதத்திற்கு முன் முதுகு தண்டுவட பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்தும் பேட்டரில் இயங்கும் சக்கர நாற்காலி கோரி மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலகத்தில் மனு அளித்திருந்தேன். அம்மனுவின்மீது தீர்வு காணப்பட்டு தமிழ்நாடு துணை முதலமைச்சரால் காட்பாடியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி எனக்கு வழங்கப்பட்டது. தற்போது என்னால் எந்தவொரு இடத்திற்கு மற்றொருவரின் துணையின்றி சுயமாக சென்று வரமுடிகிறது. வீட்டிலுள்ள நேரங்களில் ஏதாவது சுயதொழில் செய்யலாம் என எனக்கு தோன்றியது. எனக்கு ஏற்கனவே தையல் வேலை தெரியும். தையல் இயந்திரம் கிடைத்தால் சுயமாக டெய்லரிங் வேலை செய்யலாம். இதனால் நான் அரசின் இலவச தையல் இயந்திரத்தை பெற மாற்றத்திறனாளிகள் நலத்துறையில் விண்ணப்பிக்க வேலூருக்கு செல்லலாம் என எண்ணியிருந்தேன். இந்நிலையில் வேலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து துறைகள் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம் பேர்ணாம்பட்டில் இன்று நடைபெறுவதாக செய்திதாளில் வெளியான செய்தியின் மூலம் அறிந்து கொண்டேன். நான் சொந்தமாக தொழில் செய்யும் பொருட்டு இம்முகாமில் தையல் இயந்திரம் கோரி மனு அளித்தேன். இம்மனு ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டு விரைவில் தையல் இயந்திரம் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். மாற்றுத்திறனாளிகளுக்கு இது போன்ற அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்த சிறப்பு முகாமை எங்கள் பகுதியிலேயே நடத்துவதால் எங்களுக்கு சிரமமின்றி அணுக முடிகிறது. இல்லையென்றால் நாங்கள் இங்கிருந்து பஸ்சில் வேலூருக்கு சென்று மனு அளிக்க வேண்டும். ஏற்கனவே நடக்க முடியாமல் சிரமமப்படும் என்னை போன்ற மாற்றத்திறனாளிகளுக்கு 100 கி.மீ. பயணித்து சென்று வருவது என்பது மிகவும் சிரமமான விசயம். எனவே எங்கள் பகுதியிலேயே மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாமை நடத்த உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கொத்தபல்லி ஊராட்சியை சார்ந்த பாரா விளையாட்டுவீரர் மாற்றுத்திறனாளி பிரபாகரன் தெரிவித்ததாவது, நான் ஒரு முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர். நான் இதுவரை பல்வேறு பாரா விளையாட்டுகளில் பங்கேற்று பல பதக்கங்களை பெற்றுள்ளேன். மேலும் வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் வெவ்வேறு மாவட்டங்களுக்கு பாரா விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக வெளியூர் பயணம் மேற்கொள்ளும்போது இரயிலில் சென்று வர என்னால் இயலாது. மேலும் அதற்கான கட்டணத் தொகையும் என்னால் செலவிட இயலாது. எனவே முகாமில் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான ரயில்வே பயண கட்டண சலுகை அட்டை கோரி மனு அளித்திருந்தேன். என்னுடைய மனுவினை உடனடியாக பரிசினை செய்து எனக்கு இன்று ரயில்வே பயண கட்டண சலுகை அட்டையை இன்று வழங்கினார்கள். என்னைப் போன்ற மாற்றுத்திறனாளி வீரர்கள் வேலூர் சென்று வர தனிநபர் உதவி இல்லாமல் சென்ற வர இயலாது. என்னுடைய பகுதியிலேயே இம்முகாமை அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்னை போன்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு அதிகமான நலத்திட்ட உதவிகளை செய்து வருவதால் என்னுடைய மனம் நிறைவாக உள்ளது.

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், ராஜக்கல் ஊராட்சி, பன்னீர் குட்டை கிராமத்தை சார்ந்த மாற்றுத்திறனாளி ரமேஷ் தெரிவித்ததாவது, நான் பேரணாம்பட்டு பகுதியில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கு பந்தல் அமைப்பாளர் பணியினை மேற்கொண்டு வருகிறேன். எனக்கு சில காலங்களுக்கு முன்னர் நடந்த விபத்தில் என்னுடைய வலது கால் பாதிக்கப்பட்டு என்னால் நடக்க முடியாமல் போனது. பின்னர் அறுவை சிகிச்சை மூலம் செயற்கை கால் பொருத்தி தற்போது நடந்து வருகிறேன். ஆகையால் என்னுடைய பணியினை பந்தல் வேலைகளை மற்றவர் உதவியுடன் செய்து வந்தேன். மேலும் மாற்றுத்திறனாளி நலத்துறையின் மூலம் எனக்கு என் தொழிலை சிறப்பாக நடத்திட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வேண்டும் என்று கடந்த மாதம் மனு அளித்திருந்தேன். என்னுடைய மனுவினை கூர்ந்து பரிசீலனை செய்து மாற்றுத்திறனாளிகள் நல முகாமில் எனக்கு ரூ.1,01,800 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் நான் மற்றவர்களை சார்ந்து இல்லாமல் என்னுடைய பந்தல் அமைக்கும் தொழிலை சிறப்பாக செய்வேன். மேலும் என்னை போன்ற மாற்றுத்திறனாளிகள் ஏதேனும் நலத்திட்ட உதவிகள் பெற வேண்டுமானால் வேலூரில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலகத்திற்கு சென்று வந்த பிறகு தான் பெற முடியும். எங்கள் பகுதியிலே இத்தகைய அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்த மாற்றுத்திறனாளிகள் முகாமை ஏற்படுத்திக் கொடுத்ததனால் அனைத்து துறைகளும் இங்கே ஒருங்கிணைக்கப்பட்டிருந்தால் எங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள உதவியாக இருந்தது. இம்முகாமை அமைத்து கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் என்னுடைய மனமும் நிறைவாக உள்ளது.

பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், டி.டி.மோட்டூர் ஊராட்சி, கமலாபுரம் கிராமத்தை சார்ந்த மாற்றுத்திறனாளி பன்னீர், என்பவர் தெரிவித்ததாவது, நான் ஒரு தையல் தொழிலாளி. நான் தொழில் செய்வதற்கு தேவைப்படும் துணிமணிகள் மற்றும் வாடிக்கையாளர்களிடம் துணிகளை தைத்து வெளியே கொடுத்து செல்ல வேண்டுமானால் மற்றவர் உதவியை நாட வேண்டியிருக்கும். மேலும் என்னுடைய தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்கள் வாங்கவும் அடுத்தவர் உதவியை நாட வேண்டியிருந்தது. மேலும் எனக்கு சில காலம் முன்பு விபத்து ஏற்பட்டு கால் அறுவை சிகிச்சை செய்து நடக்க முடியாமல்போனது. நான் கடந்த மாதத்திற்கு முன் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் வண்டி வேண்டும் என்று மனு அளித்திருந்தேன், என்னோட மனுவினை பரிசீலித்து இன்று நடைபெற்ற முகாமில் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. இம்முகாமை ஏற்படுத்திக்கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

இம்முகாமில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில் குமரன், பேர்ணாம்பட்டு ஒன்றியக்குழுத்தலைவர் சித்ரா ஜனார்த்தனன், பேர்ணாம்பட்டு நகர்மன்ற தலைவர் பிரேமா, மாவட்ட ஊராட்சிக்குழுத்துணைத் தலைவர் கிருஷ்ணவேனி, நகர்மன்ற துணைத்தலைவர் ஆலியார் ஜுபேர் அஹமத், பேர்ணாம்பட்டு ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் லலிதா டேவிட், குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் சுபலட்சுமி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வினோத்குமார், கௌரி, பேர்ணாம்பட்டு வட்டாட்சியர் சிவசங்கரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


செய்தி வெளியீடு:
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
வேலூர் மாவட்டம்.

# ரூ.35 கோடி மதிப்பீட்டில் மஞ்சக்குப்பம் மைதானம் மேம்படுத்தப்படவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்





**கடலூர், மார்ச் 3-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சக்குப்பம் மைதானம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் மேம்படுத்தப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கடலூர் மாவட்டத்தில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும். முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு கடந்த 21.02.2025 அன்று மஞ்சக்குப்பம் மைதானத்தில் வழங்கி தெரிவிக்கையில், கடலூர் மஞ்சக்குப்பம் மைதானம் ரூ.35 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என அறிவித்தார்கள்.

கடலூர் மாவட்டத்தில் அடையாளமாக விளங்கிய பழைய ஆட்சியர் அலுவலக கட்டடத்தின் பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் வகையிலும் 2,200 நபர்கள் அமரக்கூடிய அரங்கம், மைதானத்தினை சுற்றி உணவகங்கள், சில்லரை விற்பனைக் கடைகள், பெரிய விளையாட்டுப் பகுதிகள் உள்ளிட்ட வணிக வளாக கடைகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

மேலும், மஞ்சக்குப்பம் மைதானத்திற்கு அருகேயுள்ள சுப்பராயலு பூங்கா நவீன வசதியுடன் மேம்படுத்தப்படும். மஞ்சக்குப்பம் மைதானத்திலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பொதுமக்களுக்கு தேவையான பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பூங்காவும், பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அரங்குகளும், பசுமையான நகர்ப்புற சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்படுகிறது.

மஞ்சக்குப்பம் மைதானத்தினை சுற்றி 3 பெரிய முன் வாயில்கள், குடிநீர் வசதி, மின் வசதி. அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும். இதற்கான பணிகளை மேற்கொள்ள ஆலோசகர் நியமிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும். பணிகள் அனைத்தும் நிறைவுபெறும் பொழுது கடலூர் மாவட்டத்தில் சிறந்த பொழுதுபோக்கு பூங்காவாக மஞ்சக்குப்பம் மைதானம் திகழும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

# அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன் காக்கும் தமிழக அரசு

## மதுரை மாவட்ட பயனாளிகள் முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி



**மதுரை, மார்ச் 3-**

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் 118,853 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகள் ரூ.100.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நடத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும். தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது. அதனையடுத்து கட்டுமான தொழிலாளர்கள் அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள். சமையல் தொழிலாளர்கள், ஓவியர்கள். வீட்டுப் பணியாளர்கள், தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்கள். பொற்கொல்லர், முடித்திருத்துவோர், கைவினைத் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் பட்டு நெய்யும் தொழிலாளர்கள், உடலுழைப்பு தொழிலாளர்கள் பனைமரத் தொழிலாளர்கள், மண்பாண்ட தொழிலாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், தையல் தொழிலாளர்கள். சலவைத் தொழிலாளர்கள். பாதையோர வணிகர்கள். கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் என தமிழ்நாடு அரசின் மூலம் 18 நலவாரியங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் துறையின்கீழ் இயங்கிவரும் 18 நலவாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு பெறுவதற்கு வயது வரம்பு 18 வயது முதல் 60க்குள் இருத்தல் வேண்டும். உறுப்பினர்களாக பதிவு செய்வது, புதுப்பித்தல், கேட்புமனுக்கள் போன்றவை www.tnuwwb.tn.gov.in என்ற இணைய வழியில் விண்ணப்பிக்க தமிழக அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் 1,86,121 நபர்கள் பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களாக உள்ளனர்.

அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலனுக்காக தமிழ்நாடு அரசு கல்வி உதவித்தொகை. திருமண உதவித்தொகை, வீட்டுவசதித் திட்டம். மாதாந்திர ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், பணியிடத்து விபத்து மரணம் உள்ளிட்ட 14 வகையான அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய நலத்திட்டங்களின் கீழ் மதுரை மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் (மே2021 முதல் பிப்ரவரி 2025 வரை) மொத்தம் 1,18,853 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகள் ரூ.100,33.53.127 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நடத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

குறிப்பாக, 83,266 பயனாளிகளுக்கு ரூ.16.91 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகையும். 2004 பயனாளிகளுக்கு ரூ.29.61 கோடி மதிப்பீட்டில் திருமண உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 209 பயனாளிகளுக்கு ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



18,748 பயனாளிகள் மாதாந்திர ஓய்வூதியமாக தலா ரூபாய் 1200 பெற்று பயனடைந்து வருகின்றனர். மாதாந்திர ஓய்வூதியமாக மட்டும் இதுவரை ரூ.63.87 கோடி மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவரும் நலவாரியங்களில் உறுப்பினர்களாக பதிவு செய்வதன் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளை பெற்று பயனடைய முடியும். பதிவு செய்வதற்கு www.tnuwwb.tn.gov.in என்ற இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மதுரை எல்லீஸ் நகர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலக முதல் தளத்தில் செயல்பட்டு வரும் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

ஆத்திக்குளம் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்பில் வசிக்கும் சரவணன் ஜெயபாரதி தம்பதியினர் தெரிவித்ததாவது: எங்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர். நான் சலவை தொழில் செய்து வருகிறேன். தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளேன். தமிழ்நாடு அரசு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு செயல்படுத்தி வரும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தேன். அதன் மூலம் எனக்கு ஆத்திக்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் எனக்கு புதிய வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. புதிதாக வழங்கப்பட்டு இந்த வீட்டில் போதிய இடவசதியோடு விசாலமாக உள்ளது. நமக்கென்று ஒரு புதிய வீடு என்று நினைக்கும்போது உள்ளூர மிக மகிழ்ச்சியாக உள்ளது. தமிழ்நாடு அரசு என்னைப் போன்ற அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:-
**சாலி தளபதி,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**கயிலைச் செல்வம்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா




**வளத்தி, மார்ச் 3-**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவினை மேல்மலையனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சரின் பிறந்தநாளை கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதை தொடர்ந்து கன்னலம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன், தமிழரசி, ஏற்பாட்டில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ் செழியன் கலந்துகொண்டு திமுக கட்சி கொடியை ஏற்றி உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு இனிப்புகள், மரக்கன்றுகள் மற்றும் அன்னதானம் வழங்கினர். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணி, மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் சம்பத், கன்னலம் மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் தயா, அன்னமங்கலம் நிர்மல், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# காரைக்கால் தொழில் வளர்ச்சி மையத்தில் கலெக்டர் ஆய்வு





**காரைக்கால், மார்ச் 3-**

காரைக்கால் தொழில் வளர்ச்சி மையம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை குழுவில் கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் ஆய்வு செய்தார்.

காரைக்காலில் உள்ள காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனை குழுவில், கலெக்டர் சோமசேகர் அப்பாரவ் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, அங்கு இருக்கும் எடை மேடை, ஊரக கிட்டங்கி, விவசாயிகள் ஓய்வு எடுக்கும் விடுதி மற்றும் தேசிய வேளாண் சந்தை ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார். காரைக்கால் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை மேம்படுத்துவதை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு உதவிடும் வகையிலும் பல்வேறு விதமான எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் மற்றும் பருத்தி ஜின்னிங் வசதி அமைக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் காரைக்கால் விற்பனை குழு தலைவர் செந்தில்குமாரிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, புதுச்சேரி அரசின் பாண்டிச்சேரி தொழில்துறை மேம்பாடு மற்றும் முதலீட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் காரைக்கல் போலகத்தில் உள்ள தொழில் வளர்ச்சி மையத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வு கூறுகள் குறித்து கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் ஆய்வு செய்தார்.

அப்போது, தொழில் வளர்ச்சி மையத்தில் செயல்படும் தனியார் பனிக்கட்டி உற்பத்தி நிலையம், நீர் பிளாஸ்ட் என்ற பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்ட தண்ணீர் சேமிக்கும் தொட்டி தயாரிக்கப்படும் நிலையம், வாரி என்ற சோலார் மூலம் மின் உற்பத்தி செய்யும் நிலையம் மற்றும் கன்ஃபாஃப் என்ற மருந்தின் மூலப் பொருட்கள் தயாரிக்கும் நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

# புதிய முனையம் கட்டுமான பணிகளை எம்பி ஆய்வு




தூத்துக்குடி விமான நிலையத்தில் ரூ.227.33 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய முனையம் கட்டுமானப் பணிகளை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா.

# முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் 178 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்




நாமக்கல், மார்ச் 3–

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி, திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், உஞ்சனை, திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், கருவேப்பம்பட்டி மற்றும் ஆனங்கூர். குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி. பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், எலந்தகுட்டை உள்ளிட்ட ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, 178 பயனாளிகளுக்கு ரூ.71.33 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக ஏழை எளிய, பிறப்படுத்தப்பட்ட பழங்குடியின மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வுருகின்றார்கள். மேலும், மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா இலவச விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தள்ளுபடி, மகளிர் சுய தொழில் தொடங்கிட கடனுதவி, பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், பொதுமக்களின் நலன் காக்க மக்களைத் தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வியை பாதுகாக்க இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். இத்தகைய சிறப்பான திட்டங்கள் மூலம் ஒவ்வொரும் குடும்பத்தாரும் மாதந்தோறும் ரூ.1,500 முதல் ரூ.2,000 வரை சேமிக்க முடிகிறது. விடியல் பயணத்திட்டத்தின் மூலம் மகளிர் மாதந்தோறும் சுமார் ரூ.800 வரை சேமிக்கின்றார்கள். இத்தகைய சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி மக்கள் நலன் காத்து வருகின்றார்கள்.

மேலும், அனைத்து மக்களுக்கும் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் எளிதாக கிடைக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையில் மக்களுடன் முதல்வர்" என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். தற்போது ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் அதிக அளவில் வசிக்கும் கிராம ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் "முகாம் 3ம் கட்டமாக நடத்த உத்தரவிடப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில் 60 முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு "மக்களுடன் முதல்வர்" திட்டம் மூன்றாம் கட்டமாக நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகின்றது.

அரசை தேடி மக்கள் சென்ற நிலையை மாற்றி மக்களைத் தேடி அரசு இயந்திரம் செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை நலத்துறை உள்ளிட்ட உள்ளி 15 அரசு துறைகள் சார்ந்த 44 வகையான சேவைகள் வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து செலவு, கால விரையம், அலுவலர்களுக்கு காத்திருக்க வேண்டிய நிலை ஆகியவற்றை தவிர்த்து பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் அவர்களது இருப்பிடத்திற்கு அருகிலேயே முகாம் நடத்தப்படுகிறது. இதன் மூலம் அரசே பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை பெற்று விரைந்து தீர்வு வழங்க உள்ளது.

உதாரணமாக இம்முகாம்களில் மின் இணைப்பு பெயர் மாற்றம், வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், பட்டா உட்பிரிவு மாறுதல், கடனுதவி, பல்வேறு சான்றிதழ்கள், உதவித்தொகை உள்ளிட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்வு வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர்கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல். சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சியில் ரூ.4.27 கோடி மதிப்பில் 107 திட்டப்பணிகள், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், உஞ்சனை ஊராட்சியில் ரூ.7.65 கோடி மதிப்பில் 292 திட்டப்பணிகள் மற்றும் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம், எலந்தகுட்டை ஊராட்சியில் ரூ.8.08 கோடி மதிப்பில் 250 திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான ஆட்சியானது மக்களுக்கான உன்னதமான ஆட்சி. ஏழை எளியோருக்கான எளிமையான ஆட்சி. நாங்கள் எப்போதும் உங்களுக்காக பாடுபடுவோம். மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். அரசின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ உள்ளிட்ட அரசுத்துறைகள் சார்பில் பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 66 பயனாளிகளுக்கு ரூ.15.88 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், உஞ்சனை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 41 பயனாளிகளுக்கு ரூ.31.81 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், கருவேப்பம்பட்டி ஊராட்சி, சீனிவாசம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் 12 பயனாளிகளுக்கு ரூ.8.46 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், ஆனங்கூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் 17 பயனாளிகளுக்கு ரூ.11.08 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் எலந்தகுட்டை ஊராட்சி, இ.புதுப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் 42 பயனாளிகளுக்கு ரூ.4.10 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 178 பயனாளிகளுக்கு ரூ.71.33 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

இம்முகாம்களில் அட்மா குழுத்தலைவர்கள் பி.பி.தனராசு (பரமத்தி), மு.தங்கவேல் (எலச்சிபாளையம்), தங்கவேல் (திருச்செங்கோடு), பொ.யுவராஜ் (பள்ளிபாளையம்), தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், மாவட்ட சமூக நல அலுவலர் தி.காயத்திரி, மாவட்ட மேலாளர் தாட்கோ பா.ராமசாமி, முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# கயத்தாறில் மாட்டுவண்டி பந்தயம்





கயத்தாறு, மார்ச் 3–

கயத்தாறில் சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு ஊர் மக்கள் சார்பில் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது. இந்த மாட்டு வண்டி பந்தயத்தில் பெரிய மாடு வண்டி 8, நடு மாடு வன்டி 15, பூஞ்சிட்டு மாட்டு வண்டி 31என வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டு போட்டிகள் நடைபெற்றன. இந்த போட்டிகளில் கயத்தாறில் இருந்து நொச்சி குளம் வரை, 14 கிலோமீட்டர் தூரம் ஓடியது, இதில் பெரிய மாட்டுவண்டி பந்தயத்தில் முதல் வண்டி சீவலப்பேரி, 2வது ஐயங்கார் பேக்கரி வண்டி, மூன்றாவது கடம்பூர் வண்டி என பந்தயத்தில் ஓடியது. இதனை தொடர்ந்து சின்னமாட்டு வண்டி பந்தையத்தில் முதல் பரிசை கயத்தாறு கருப்பசாமி என்பவரின் மாட்டு வண்டி முதலிடத்தை பிடித்து, இந்த போட்டிகளை கயத்தாறு கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னப்பாண்டியன் மற்றும் பேரூராட்சி மன்ற தலைவர் சுப்புலட்சுமி ராஜதுரை ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். இந்த மாட்டு வண்டி பந்தயத்தில் 53 ஜோடி மாட்டு வண்டிகள் கலந்துகொண்டன. இதில முதல் பரிசு ரூபாய் 50 ஆயிரம் மற்றும் கேடயம், வெள்ளாட்டன் கிடாய், வழங்கப்பட்டது. இரண்டாவது பரிசை சாலைபுதூர் திமுக கிளைச் செயலாளரும் தொழில் அதிபருமான முத்துப்பாண்டியன் வழங்கினார். இதி மூன்றாவது பரிசு என மூன்று விதமான போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் கேடயம் ஆடுகள் பிற நபர்கள் சிறப்பு பரிசுகளும் வழங்கினார்கள். இந்த மாட்டு வண்டி பந்தையத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கயத்தாறு நகர மக்கள் மற்றும் மாட்டு வண்டி சங்க நிர்வாகிகள், இளைஞர் அணி செய்திருந்தன.

# தவெக சார்பில் நீர்மோர் பந்தல் திறப்பு



விழுப்புரம், மார்ச் 3–

விழுப்புரம் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் விக்கிரவாண்டி மத்திய ஒன்றிய பகுதிக்கு உட்பட்ட குண்டலப்புலியூர் கிளை கழகம் சார்பில் மத்திய ஒன்றிய நிர்வாகி பாரதி ஏற்பாட்டில் விழுப்புரம் தென்மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் தலைமையில் கோடை வெயிலில் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு தர்பூசணி இளநீர் மோர் கூல்ட்ரிங்ஸ் ரோஸ்மில்க் உள்ளிட்ட பானங்கள் வழங்கப்பட்டன. ஒன்றிய நிர்வாகி சேகர், மணிராஜன், முத்து, ஜான் பீட்டர், ஜில்லா ராம், தாஸ் செந்தில், ஞானவேல், தினகரன், நெல்சன், முனுசாமி, சுரேஷ், ஜெயக்குமார், சுபாஷ், எட்டியான், கார்த்திக் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அபயம் தொண்டு நிறுவனம் சார்பில் மாணவனுக்கு சைக்கிள் வழங்கல்




புதுச்சேரி, மார்ச் 3–

புதுச்சேரி முதலியார்பேட்டையில் கடந்த 2004ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் அபயம் தொண்டு நிறுவனத்தின் கிங்கிசீ ழிநிளி சார்பில் புதுச்சேரி கடற்கரை நகர ரோட்டரி சங்கம் மூலமாக வறுமையுற்ற எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவனுக்கு சைக்கிள் இலவசமாக வழங்கப்பட்டது. அபயம் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் சுந்தர முருகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புதுச்சேரி கடற்கரை நகர ரோட்டரி சங்கத்தின் தலைவர் ரோட்டரி வினோத் ஷர்மா, ரோட்டரி நிர்வாகி புருஷோத்தமன் கலந்துகொண்டு மாணவனுக்கு சைக்கிளை இலவசமாக வழங்கினர்.

# அரசு முறை பயணமாக நேபாளம் சென்ற புதுச்சேரி எம்.எல்.ஏ.,க்களுக்கு உற்சாக வரவேற்பு



புதுச்சேரி, மார்ச் 3–

அரசு முறை பயணமாக சபாநாயகர் தலைமையில் நேபாளம் சென்ற புதுச்சேரி எம்.எல்.ஏ.,க்களுக்கு அந்நாட்டு அதிகாரிகள் விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

நேபாள நாட்டின் சட்டசபையை காண நாட்டு அரசு சார்பில், புதுச்சேரி எம்.எல்.ஏ.,க்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

புதுச்சேரி அரசு அதற்கான முன்னேற்பாடுகள் செய்ததை யடுத்து அரசு முறை பயணமாக சபாநாயகர் செல்வம் தலைமையில், புதுச்சேரி எம்.எல்.ஏ.,க்கள் 7 நாள் பயணமாக நேபாளம் நாட்டுக்கு சென்றனர்.

நேற்று, அந்நாட்டு விமான நிலையத்தில், அவர்களுக்கு அதிகாரிகள் சிறப்பான வரவேற்பளித்தனர். நேபாளம் சென்றுள்ள எம்.எல்.ஏ.,க்கள் அந்நாட்டு சட்டசபை மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு முக்கிய இடங்களை பார்வையிட்ட பின்னர் புதுச்சேரிக்கு திரும்புகின்றனர்.

# முதல்வர் முக ஸ்டாலின் பிறந்த நாள் விழா





திருவெண்ணைநல்லூர் அருகே அரும்பட்டு கிராமத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் வீராசாமி தலைமையில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏஜே மணி கண்ணன் முன்னிலையில் கிராம இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், பள்ளி மாணவர்களுக்கு நோட்டுபுக்கு, எழுதுகோல் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு காய்கறிகள் வழங்கி சிறப்பித்தனர். இதில் அனைவரையும் இரா.சசிகுமார் வரவேற்றார் நிர்வாகிகள் சந்திப், ஆனந்தராஜ், சோழன், ஹேமந்த் குமார், பிரசாந்த் கலந்து கொண்டனர்.

# சண்டே மார்க்கெட்டில் குற்றங்களை தடுத்திட ரோந்து பணிகளை தீவிரப் படுத்த வேண்டும்

## வியாபார தொழிலாளர் சங்க பேரவை தீர்மானம்

புதுச்சேரி, மார்ச் 3–

ஏ.ஐ.டி.யூ.சி., சண்டே மார்க்கெட் வியாபார தொழிலாளர் சங்க பேரவை கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பாபு, கார்த்திகேயன், தயாளன் ஆகியோர் தலைமை தாங்கினர். கூட்டத்தில் ஏ.ஐ.டி.யூ.சி., நிர்வாகிகள் அபிஷேகம், தினேஷ் பொன்னையா, சேதுசெல்வம், அந்தோணி, துரைசெல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் துணைத் தலைவர்கள் இக்பால், டோனி, முகமது அலி, சங்கர், துணைச் செயலாளர்கள் சரவணன் சிலம்பரசன், நாகராஜ், பழனிவேல், அருள்ராஜ், கமிட்டி உறுப்பினர்கள் சாமிநாதன், ராஜசேகரன், ராஜதுரை, வேம்பன், ராமராஜன், தவமணி, நீலாவதி, ஏழுமலை, மதுத், பாலகிருஷ்ணன், சதக்துல்லா, கோவிந்தன், வளையாபதி, செந்தில்குமார், செல்வம், முஜிப் ரகுமான், சிராஜ், ராம்ராஜ் உட்பட வியாபாரிகள் கலந்துகொண்டனர்.



கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவது, புதுச்சேரி சண்டே மார்க்கெட்டில் சுமார் 800 க்கும் மேற்பட்ட கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகளில் 3 ஆயிரத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் இடமாக சண்டே மார்க்கெட் விளங்குகிறது. வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இயங்கும் இந்த மார்க்கெட் பகுதியில் போக்குவரத்து நெரிசலினால் வியாபாரிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பொருட்கள் வாங்க வருகின்ற மக்களுக்கும் போக்குவரத்து நெரிசலினால் இடையூறு ஏற்பட்டு பொருட்கள் வாங்குவதற்கு சிரமப்படுகின்றனர்.

சண்டே மார்க்கெட் வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் போக்குவரத்து நெரிசலினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திட ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டும் சண்டே மார்க்கெட் சாலையில் நான்கு சக்கர வாகனங்கள் செல்லாத வகையில் பேரிகார்ட் அமைத்து போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்திடவும், கூட்ட நெரிசலை பயன்படுத்தி நடைபெறும் குற்றங்களை தடுத்திட கண்காணிப்பு கேமராக்கள் அமைத்திடவும், சமூகவிரோதிகளால் சண்டே மார்க்கெட் வியாபாரிகளுக்கு ஏற்படும் இடையூறுகளை தடுத்திட காவல்துறையினர் தொடர் ரோந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

புதுச்சேரி மாநிலத்தின் அடையாளங்களில் ஒன்றாக சண்டே மார்க்கெட் திகழ்கிறது. சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக மகாத்மா காந்தி வீதியில் செயல்பட்டு வரும் சண்டே மார்க்கெட்டில் அனைத்து தரப்பு மக்களும் தங்களின் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப அவர்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிச் செல்லும் இடமாக விளங்குகிறது. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் செயல்படும் இந்த மார்க்கெட்டிற்கு புதுச்சேரி பகுதியை சார்ந்தவர்கள் மட்டுமின்றி புதுச்சேரியின் அருகில் உள்ள தமிழகத்தின் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்லும் நிலை உள்ளது. சுற்றுலா பயணிகள் தங்களின் பயணத்தில் கண்டிப்பாக பார்க்கக்கூடிய இடமாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லக்கூடிய பகுதியில் மக்களின் அடிப்படை தேவையான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதியை புதுச்சேரி நகராட்சி சார்பில் அமைத்துக் கொடுத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம், மார்ச் 3–

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர். பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மைத்துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் சேலம், கோவை உட்பட 9 மாவட்ட விவசாயிகளிடம் வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்து கருத்து கேட்புக்கூட்டம் நடத்தப்பட்டதற்கு விவசாயிகள் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.



விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசால் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்ற அனைத்துத் திட்டங்களையும் வேளாண் பெருமக்களுக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பதுடன் விவசாயிகளின் குறைகளை அனைத்துத் துறை அலுவலர்கள் அறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் இத்தகைய விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகின்றன.

சேலம் மாவட்டத்தில் வேளாண்மை சாகுபடியைப் பொறுத்தவரை நெல், சோளம், மக்காச்சோளம், ராகி, நிலக்கடலை உள்ளிட்ட உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் என ஜனவரி 2025 மாதம் முடிய 2,04,726.6 ஹெக்டர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

மேலும், விவசாயிகளின் கோரிக்கை மனுக்களுக்கு தனி கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்களை விவசாயிகள் அறிந்து, நல்ல முறையில் பயன்படுத்தி, வேளாண் தொழிலை மேம்படுத்தி, விவசாய பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்து, தங்கள் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றையதினம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் தக்காளிக்கு விலையை நிர்ணயம் செய்தல், வேளாண்மைத்துறை அலுவலர்கள் தென்னை உள்ளிட்ட வேளாண் சாகுபடி பகுதிகளில் நோய் தாக்கம் குறித்து கள ஆய்வு செய்து உரிய ஆலோசனைகளை வழங்குதல் உழவர் சந்தை உள்ளிட்ட இடங்களுக்கு வந்து செல்லும் விவசாயிகளுக்கு ஏதுவாக பேருந்து நிறுத்தங்களை முறைப்படுத்திடுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து எடுத்துரைத்து மனுக்களை வழங்கியுள்ளனர். விவசாயிகளின் இத்தகைய கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அலுவலர்கள் பணியாற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தையொட்டி மாவட்ட ஆட்சியரக தரைதளத்தில் தென்னையை தாக்கும் வாடல் நோய், தென்னை ஓலைகள் மஞ்சள் நிறமடைதல் போன்ற நோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது குறித்து கருத்துக்காட்சி அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதேபோன்று, வேளாண் உற்பத்தியாளர்கள் நிறுவனம் சார்பில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், சிறுதானியங்கள் குறித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் கருத்துக்காட்சிகளும் அமைக்கப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குநர் சிங்காரம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜ்குமார், கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் டாக்டர் என்.பாரதி, வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா (சேலம்), ந.லோகநாயகி (சங்ககிரி), தோட்டக்கலை துணை இயக்குநர் மஞ்சுளா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ந. நீலாம்பாள், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் இரா. குமரன் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

# கல்லிடைக்குறிச்சி – புளியங்குடி வரை அரசு பேருந்தை மீண்டும் இயக்க அமைச்சரிடம் கோரிக்கை



தென்காசி, மார்ச் 3–

கல்லிடைக்குறிச்சி முதல் புளியங்குடி வரை 113நி என்ற பேருந்து அம்பாசமுத்திரம், விகேபுரம், டானா, ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி, கடையம், நரையப்புரம், கட்டேறிபட்டி, புங்கம்பட்டி, மயிலப்புரம், ஆவுடையானூர், பாவூர்சத்திரம், கீழப்பாவூர், சுரண்டை, சாம்பவர் வடகரை, ஆய்குடி, கடையநல்லூர் வழியாக சுமார் 50க்கும் மேற்பட்ட சிறு குரு கிராமங்களை கடந்து புளியங்குடிக்கு சென்று வந்தது.

இந்த பேருந்து மூலம் அந்த பகுதியில் வசிக்கிற விவசாய தொழிலாளர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். கடந்த ஆண்டுதிடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் அந்த பகுதி பொதுமக்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கண்ட பகுதி வழியாக இயங்கி வந்த 113 நி என்ற அரசு பேருந்து மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்கிட வேண்டும் என்ற கோரிக்கை மனுவை பெருந்தலைவர் காமராஜர் எம்ஜிஆர் தொண்டு நிறுவன தலைவர் மயிலபுரம் செல்வின், முன்னாள் மாவட்ட செயலாளர் சிவபத்மனாதனிடம் அளித்தார். அதனை முன்னாள் தெற்கு மாவட்ட செயலாளர் சிவபத்மனாதன் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரிடம் வழங்கினார்.

மனுவினை பெற்றுக்கொண்ட அமைச்சர் அக்கோரிக்கை மனுவினை நிர்வாக இயக்குனருக்கு பரிந்துரை செய்து மீண்டும் அந்த பேருந்து அந்த வழித்தடத்தில் இயக்கிட நடவடிக்கை எடுத்திட கூறினார்கள்.

நிகழ்ச்சியின்போது மாவட்ட அவை தலைவர் சுந்தர மகாலிங்கம், கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சீனித்துரை, பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, கடையநல்லூர் ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் காசி தர்மம் துரை, மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன், சக்திராஜ், கழக வழக்கறிஞர் ஹரிகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நாமக்கல்லில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தில் ஆட்சியர் நேரில் ஆய்வு



நாமக்கல், மார்ச் 3–

நாமக்கல் மாவட்டம், செல்லப்பம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் கீரின் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிகளில் இன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தேர்வு மையங்களில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சொல்வதை எழுதுபவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு இன்று (3.3.2025) முதல் நடைபெற உள்ளது. இத்தேர்வினை 7 அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 176 மாணவர்கள், 411 மாணவியர்கள் என 587 மாணவ, மாணவியர்கள், 95 அரசுப்பள்ளிகளில் 4,598 மாணவர்கள், 5,170 மாணவியர்கள் என 9,768 மாணவ, மாணவியர்கள், 4 அரசு உதவிப்பெறும் (பகுதி அளவு) 463 மாணவர்கள், 388 மாணவியர்கள் என 851 மாணவ, மாணவியர்கள், 92 தனியார் பள்ளிகளில் 3,920 மாணவர்கள், 3,335 மாணவியர்கள் என 7,255 மாணவ, மாணவியர்கள் என ஆக மொத்தம் 198 பள்ளிகளில் 9,157 மாணவர்கள், 9,304 மாணவியர்கள் 61 601 மொத்தம் 18,461 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதவுள்ளனர்.

மேல்நிலைப் பொதுத்தேர்வுக்கு 86 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 86 துறை அலுவலர்கள். 4 கூடுதல் துறை அலுவலர்கள், 200 பறக்கும்படை உறுப்பினர்கள், வழித்தட அலுவலர்கள் 24, வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் 3 மற்றும் அறைக்கண்காணிப்பாளர்கள் 1,260 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆய்வுகளில் முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் புத்தக மையம் திறந்து வைத்தார் அமைச்சர்

விழுப்புரம், மார்ச் 3–

விழுப்புரம் புதிய பேருந்து நிலையத்தில் நியூ சென்சூரி புத்தகம் மையத்தை வனத்துறை – கதர் கைத்தரித்துறை அமைச்சர் க.பொன்முடி திறந்து வைத்து. புதிய புத்தகங்களை வெளியிட்டார். முதல் புத்தகத்தை முட்டத்தூர். ஓய்க்காப் மேனிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியரும். ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்டக் கன்வீனர். ம.பாபு செல்வதுரை பெற்றுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். துரை ரவிக்குமார், முன்னாள் அமைச்சர் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் மஸ்தான், விழுப்புரம். சட்டமன்ற உறுப்பினர். இரா. லட்சுமணன். விக்கிரவாண்டி சட்ட மன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிகண்ணன், மாவட்ட சேர்மன் ஜெயச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் மற்றும் வாசகர்கள் கலந்துகொண்டனர்.



# காரைக்காலில் பிளஸ்2 தேர்வு தொடங்கியது

## 8,105 பேர் பங்கேற்பு

**புதுச்சேரி, மார்ச் 3-**

தமிழ்நாடு பாடத்திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் இன்று துவங்கிய பிளஸ் 2 பொதுத் தேர்வினை 8,105 மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

புதுவைக்கு என தனி கல்வி வாரியம் இல்லாத நிலையில் தமிழக அரசு பாடத்திட்டத்தை பல ஆண்டுகளாக பின்பற்றி வந்தனர். இதனால் புதுச்சேரியில் நீண்ட காலமாக தமிழகத்தை பின்பற்றி பிளஸ் 2, எஸ். எஸ்.எல்.சி.,தேர்வுகள் நடந்தது. இந்த நிலையில் கடந்த கல்வி ஆண்டில் புதுச்சேரி அரசு பள்ளிகளில் முதல் வகுப்பில் இருந்து 9ம் வகுப்பு வரையிலும், 11ம் வகுப்பிலும் மத்திய அரசின் சி.பி.எஸ்.இ., பாடத்திட்டம் அமலானது. நடப்பு கல்வி ஆண்டில் புதுவையில் 10, 12ம் வகுப்புகளிலும் சி.பி.எஸ்.இ., பாடத்திட்டம் அமலானது. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு சி.பி.எஸ்.இ., பாடத்திட்டத்தில் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பொதுத்தேர்வுகளை எழுதி வருகின்றனர். அதே நேரத்தில் தனியார் பள்ளிகளில் தமிழக அரசு பாடத்திட்டம் செயல்படுகிறது. அந்த பள்ளிகளில் பிளஸ் 2 பொதுத்தேர்வு இன்று (3ம் தேதி) துவங்கியது.

இது தொடர்பாக புதுவை அரசு பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர் சிவகாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, பிளஸ் 2 பொதுத்தேர்வுக்கு தேர்வு துறையால் இன்று திங்கட்கிழமை முதல் 27ம் தேதி வரை அறிவிக்கப்பட்ட தேர்வுகள் அட்டவணைப்படி பொதுத் தேர்வுகள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதியில் நடத்தப்படுகிறது. புதுவையில் 20 மையங்களும், காரைக்காலில் 5 மையங்களும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், பறக்கும் படை அலுவலர்கள், நிலையான படை அலுவலர்கள், வழித்தட அலுவலர்கள் மற்றும் அறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு புதுவை பகுதியில் பிளஸ் 2 தேர்வினை 86 தனியார் பள்ளியை சேர்ந்த 6,992 மாணவர்களும், 362 தனி தேர்வர்களும் எழுதுகின்றனர்.

காரைக்காலில் 16 தனியார் பள்ளியை சேர்ந்த 640 பள்ளி மாணவர்களும், 111 தனித் தேர்வர்களும் என மொத்தம் 8,105 பேர் தேர்வு எழுதுகின்றனர். தேர்வு மையத்திற்குள் பாதுகாப்பு ஏற்பாடு மற்றும் தேர்வின் போது தடையின்றி மின்சார சேவை வழங்க உரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு எழுத வரும் மாணவர்கள் செல்போன் உட்பட எந்த தகவல் தொடர்பு சாதனமும் கொண்டு வரக்கூடாது.

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு இல்லாத மாணவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தனித்தேர்வர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புகைச் சீட்டு எண் மற்றும் பிறந்த தேதியை வைத்து தனியார் கணினி மையம் மூலம் தேர்வு கூட அனுமதி சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வு அறை, தேர்வு மையத்தில் ஒழுங்கீன செயலில் ஈடுபடும் தேர்வர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் புரியும் குற்றத்திற்கு ஏற்ப தண்டனைகள் அளிக்கப்படும். தேர்வர்கள் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடாமல் இருத்தல் வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சேலம் கோட்டம் சார்பில் புதிய வழித்தட பேருந்து சேவைகளை துவக்கி வைத்த அமைச்சர்

**சேலம், மார்ச் 3-**



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் புதிய வழித்தடம். வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில், மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன் முன்னிலையில் சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்து, ஆத்தூர், வாழப்பாடி, சங்ககிரி மற்றும் மேட்டூர் கிளைகளில் போக்குவரத்து பணியாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறைகளை இன்று திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும். கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன் பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இன்றையதினம் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 5 ரோடு. ஏ.வி.ஆர் ரவுண்டானா, கொண்டலாம்பட்டி பைபாஸ் வழியாக மல்லூர் வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து அஸ்தம்பட்டி வழியாக கன்னங்குறிச்சி வரையிலும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து அக்ரஹாரம் வழியாக அயோத்தியாபட்டிணம் வரையிலும், மகுடஞ் சாவடியிலிருந்து எர்ணாபுரம், நம்பியாம்பட்டி வழியாக இளம்பிள்ளை வரையிலும், எடப்பாடியிலிருந்து எருமைப்பட்டி, கொங்கணாபுரம் அரசு மேல் நிலைப்பள்ளி வழியாக கொங்கணாபுரம் வரையில் இயங்கும் வகையிலும் என 5 புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, தலைவாசல் முதல் ஆத்தூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது புத்தூர் வரையிலும், ஆத்தூரிலிருந்து வாழப்பாடி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது புனல்வாசல் வரையிலும், தாசனூரிலிருந்து ஓமலூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது தாசனூரில் இரவு தங்கும் வகையில் மாற்றம் செய்தும், சேலத்திலிருந்து தெர்மல் வழியாக மேட்டூருக்கு இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது சேலம் கேம்ப் வழியாக செல்லும் வகையிலும் என 4 பேருந்து சேவைகள் வழித்தட மாற்றம் செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஆத்தூர் முதல் புலாம்பாடி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது மேலகுணங்குடி வரையிலும், தலைவாசலில் இருந்து நாவக்குறிச்சி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது சிறுவாச்சூர் வரையிலும், சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து பெரியப்பட்டி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது சாமிநாயக்கன்பட்டி வரையிலும், கஞ்சநாய்க்கன்பட்டியிலிருந்து சேலம் நகரப் பேருந்து நிலையம் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது சாமிநாயக்கன்பட்டி வரையிலும், ஏற்காட்டிலிருந்து குண்டூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது தெப்பக்காடு வரையிலும் என 5 பேருந்து சேவைகள் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, போக்குவரத்து பணியாளர்கள் பணி நேரத்தில் ஓய்வெடுக்கும் வகையில் ஆத்தூர், வாழப்பாடி, சங்ககிரி மற்றும் மேட்டூர் கிளைகளில் பணியாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் ஜோசப் டயஸ், பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# தமிழக வெற்றி கழகம் கொடியேற்று விழா



**கோவை, மார்ச் 3-**

கோவை சிங்காநல்லூர் தொகுதி வரதராஜபுரம் பகுதியில் முதன்முறையாக தனது வீட்டில் 20 அடி உயரத்தில் தமிழக வெற்றி கழகம் கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் தளபதி தமிழ் தலைமையில் இணை அமைப்பாளர் மனோஜ் இல்லத்தில் தமிழக வெற்றி கழகம் கொடியை பறக்கவிட்டனர்.

கொடியேற்று விழாவில் கோவை கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ், அண்ணன் மற்றும் கிரி பிரசாத் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு வீட்டில் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கினார்கள். இதுகுறித்து தமிழக வெற்றி கழகம் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் கூறுகையில், கழக தலைவர் விஜய் உத்தரவின் பேரிலும், பொது செயலாளர் ஆனந்த் வழிகாட்டுதலின்படி கழகத்தின் வெற்றிக்கொடியை தனது வீட்டில் பறக்கவிட்டு கோவை கிழக்கு மாவட்ட செயலாளர் தளபதி தமிழ் மற்றும் மனோஜ் ஆகியோருக்கு கழகத்தின் சார்பாகவும் எனது சார்பாகவும் பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் தளபதி தமிழ் மற்றும் இணை அமைப்பாளர் ஸ்ரீதர் சௌஜீத் வினோத் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் தினேஷ், குகனேஷ், தீபக், லோகநாதன், விக்னேஷ் மற்றும் அணி பகுதி வார்டு செயலாளர் அனைவரும் கலந்துகொண்டனர். மதன், நரேஷ், சரவணன், வினோத், சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் கிழக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் தளபதி தமிழ் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் வழங்கல்

**கன்னியாகுமரி, மார்ச் 3-**



கன்னியாகுமரி மாவட்டம், இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.5 லட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் புத்தன் துறை புனித அந்தோணியார் ஆலய திருவிழாவில் மின்சாரம் தாக்கி அகாலமரணம் அடைந்த ஜஸ்டஸ், மைக்கேல் பின்றோ, அருள் சோபன், மரிய விஜயன் ஆகியோரின் உடல்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ராஜேஸ்குமார் முன்னிலையில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தி தெரிவிக்கையில்:

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் புனித அந்தோணியார் தேவாலய வருடாந்திர திருவிழா நடந்துவரும் நிலையில் நடைபெற்ற தேர் பவனியில் அலங்காரம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வைக்கப்பட்டிருந்த இரும்பு ஏணியை சாலையின் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற முயன்றபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி, இனயம் புத்தன்துறையைச் சேர்ந்த ஜஸ்டஸ், மைக்கேல் பின்றோ, அருள் சோபன், மரிய விஜயன் ஆகிய நான்கு நபர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டதோடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து லட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண உதவித்தொகை பாதிக்கப்பட்ட நான்கு குடும்பத்திற்கும் தனித்தனியே தலா ரூ.5 லட்சத்திற்கான காசோலை என மொத்தம் ரூ.20 லட்சத்திற்கான நிவாரண உதவித்தொகை வழங்கி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பத்மநாபபுரம்சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, , மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் சின்னகுப்பன், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், பங்குதந்தையர்கள், துறை அலுவலர்கள் மற்றும் மீனவ பிரதிநிதிகள், பொதுமக்ககள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# வேலூரில் சமுதாய வளைகாப்பு விழா

**வேலூர், மார்ச் 3-**

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, , அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் நந்தகுமார், அணைக்கட்டு கே.கே.ஏஸ் மஹாலில் சமுதாய வளைகாப்பினை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பாபு, அணைக்கட்டு ஒன்றியக்குழுத்தலைவர் பாஸ்கரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் சித்ரா குமாரபாண்டியன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணமேனன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் விஷ்ணுபிரியா, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சாந்தி பிரியதரிசினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# காரைக்கால் பள்ளிவாசல்களில் ரம்ஜான் மாத நோன்பு திறப்பு

## திரளான இஸ்லாமியர்கள் பங்கேற்பு



**காரைக்கால், மார்ச் 3-**

காரைக்காலில் நேற்று மாலை பல்வேறு பள்ளிவாசல்களில் ரம்ஜான் மாத முதல் நோன்பு திறப்பு திரளான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர்.

ரம்ஜான் எனும் இந்த புனித மாதத்தில், உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்கள் தினசரி நோன்பை அனுசரிக்கிறார்கள். இந்த நோன்பு இஸ்லாத்தின் ஐந்து கடமைகளுள் ஒன்றாக கருதப்படுகிறது. அதன்படி தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட நாடு முழுவதும் ரம்ஜான் பிறை நேற்று தெரிந்ததால் நேற்று முதல் இஸ்லாமியர்கள் ரமலான் நோன்பு தொடங்கினர். இந்த நிலையில் நேற்று மாலையில் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் இஃப்தார் என்னும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பெரியபள்ளிவாசல், கிதர் பள்ளிவாசல் உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களில் பிரத்யேகமாக தயாரிக்கப்படும் நோன்பு கஞ்சியை அருந்தி ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் நோன்பை திறந்தனர். இதனை அடுத்து பள்ளிவாசல்களில் நோன்பு திறப்பு நிகழ்ச்சி அடுத்து சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

# 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையங்களை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு



கடலூர், மார்ச் 3–

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் மற்றும் முதுநகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முழுவதும் மேல்நிலைத் தேர்வு இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகள் வரும் 03.03.2025 முதல் தொடங்கப்பட்டு 25.03.2025 வரையில் நடைபெறவுள்ளது. 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வானது கடலூர் கல்வி மாவட்டத்தில் 134 பள்ளிகளில் 67 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 8,676 மாணவர்களும் 9,119 மாணவிகளும் என மொத்தம் 17,795 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். விருத்தாசலம் கல்வி மாவட்டத்தில் 112 பள்ளிகளில் 55 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 6,273 மாணவர்களும் 6,091 மாணவிகளும் என மொத்தம் 12,364 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். கடலூர் மாவட்டத்தில் 122 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 246 பள்ளிகளைச் சேர்ந்த 14,949 மாணவர்களும், 15,210 மாணவிகளும் என மொத்தம் 30.159 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

இத்தேர்விற்கு 5 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களும், மண்டல அளவிலான 3 விடைத்தாள் சேகரிப்பு மையங்களும், 3 விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களும், 28 வினாத்தாள் வழங்கப்படும் வழித்தடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு தேர்வு மையங்களிலும், மாணவர்களின் நலன் கருதி குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, தடையில்லா மின்சார வசதி, காவல்துறையினரின் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு உரிய நேரத்தில் சென்றிடும் பொருட்டு சிறப்பு போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வினாத்தாட்கள் மற்றும் விடைத்தாட்களை பாதுகாப்பாக கொண்டு சென்றிட ஆயுதம் தாங்கிய காவலருடன் பாதுகாப்புடன் கூடிய வாகன வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேர்வுப்பணியில் 28 வழித்தட அலுவலர்களும், 122 முதன்மை கண்காணிப்பாளர்களும், 6 கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்களும், 122 துறை அலுவலர்களும், 6 கூடுதல் துறை அலுவலர்களும். 1.567 அறை கண்காணிப்பாளர்களும், 200 நிலைப்படை, பறக்கும் படை உறுப்பினர்களும் மேலும், தலைமையாசிரியர்கள், முதுகலை ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் தேர்வு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பன்னிரண்டாம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு இத்தேர்வானது தங்களுடைய எதிர்கால வாழ்வினை தீர்மானிக்கும் தேர்வு என்பதால் கவனமுடன் வினாத்தாட்களை படித்து நன்கு தேர்வு எழுதிட வேண்டும். மேலும், நடைபெறும் பொதுத்தேர்வினை எவ்வித அச்சமும் இன்றி, சிந்தனைகளை சிதற விடாமல், தேர்வு முடியும் வரை நாள்தோறும் பாடங்களை நன்கு படித்து தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

ஆய்வின் போது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எல்லப்பன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஜெயலலிதா 77வது பிறந்தநாள் விழா





சேலம், மார்ச் 3–

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சிதலைவர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க, சேலம் மாநகர் மாவட்ட கொண்டலாம்பட்டி பகுதி 3 வட்ட கழகத்தின் சார்பாக ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் விழா சேலம் மாநகர் மாவட்ட பொறுப்பாளரும், கழக அமைப்புச் செயலாளர் சிங்காரம் வழிகாட்டுதல் படியும் முன்னாள் எம்எல்ஏ, எம்கே செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் பாலசுப்ரமணியன், முன்னாள் மேயர் சவுண்டப்பன், முன்னாள் எம்எல்ஏ சக்திவேல், முன்னாள் கவுன்சிலர் மீனாட்சி சுந்தரம், எஸ்பிஎஸ். சிவகுமார் ஜெகதீஷ்குமார், எம்ஜிஆர் மன்ற மாவட்ட செயலாளர் நெத்திமேடு முத்து ஆகியோர்கள் கலந்துகொண்டு களரம்பட்டி ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் அலங்கார பந்தலில் புரட்சித்தலைவி ஜெயலலிதாவின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இதில் 300 பெண்களுக்கு புடவைகளும், 200 மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம், பென்சில் உள்ளிட்டவைகளை வழங்கி மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் தங்கவேல், புல்லட் லோகு, ஆறுமுகம், முருகேசன், முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், வட்டகழக சார்பு மன்ற நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை வட்ட கழக செயலாளர் ராஜேஷ் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு நடைபெறுவதை ஆட்சியர் நேரில் ஆய்வு



நெல்லை, மார்ச் 3–

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மேரி சார்ஜென்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று (03.03.2025) நடைபெற்ற மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் 03.03.2025 முதல் 27.03.2025 முடிய நடைபெறுகிறது. திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு இன்று தொடங்கி உள்ளது. இந்த பொதுத்தேர்வினை 8,921 மாணவர்களும் 10,895 மாணவிகளும் என மொத்தம் 19,816 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதுகின்றனர். மேலும் தனி தேர்வாளர்கள் 416 மாணவர்களும் ஆக மொத்தம் 20,232 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதுகின்றனர்.

மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகள் (28 அரசுப்பள்ளிகள், 38 அரசு உதவிபெறும் பள்ளிகள், 06 தனியார் பள்ளிகள்) மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறைச் சாலை 01 மையம் என மொத்தம் 73 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது.

மேலும், மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு வருவதற்கும், தேர்வுகள் முடிந்த பிறகு தங்களின் இடங்களுக்கு செல்லவும் வசதியாக போதுமான போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு மையங்கள் மற்றும் வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் ஆகியவற்றில் தேவையான சூழ்நிலையில் பயன்படுத்த வசதியாக தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைத்திருக்கவும் மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுக்கு அமைக்கப்பட்டுள்ள 73 தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களில் இருந்து பல்வேறு வழித்தடங்கள் வழியாக வினாத்தாட்கள் கொண்டு செல்லும் வாகனங்களுக்கும் ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 2,000 ஆசிரியர்கள் தேர்வு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நிலையான படை 110 ஆசிரியர்களும், அதிகாரிகள் தலைமையில் 7 பறக்கும் படைகளும் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

மேல்நிலை முதலாம் ஆண்டுக்கான தேர்வு 05.03.2025 முதல் 27.03.2025 வரை நடைபெறவுள்ளது. 9,307 மாணவர்களும், 10,991 மாணவிகளும், தனி தேர்வாளர்கள் 398 மாணவ,மாணவியர்கள் ஆக மொத்தம் 20,696 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதவுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆய்வின்போது இணை இயக்குநர் ஞானகௌரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சிவகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தார்கள்.

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மையத்தில் ஆட்சியர் ஆய்வு



சேலம், மார்ச் 3–

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு இன்று (03.03.2025) தொடங்கியுள்ளதையொட்டி, சேலம் மாவட்டத்தில் தேர்வுகள் நடைபெறும் மையங்களில் ஒன்றான சேலம், அரசு கோட்டை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: சேலம் மாவட்டத்தில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் இன்று 03.03.2025 முதல் 25.03.2025 வரை நடைபெறுகிறது. இதில் மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் 20,206 மாணவர்கள், 17,732 மாணவிகள் என மொத்தம் 37,938 பேர் தேர்வு எழுத உள்ளனர். குறிப்பாக, 932 மாற்றுத்திறனாளி மாணவர்கள் சொல்வதை எழுதுபவர்கள் உதவியுடன் (ஷிநீக்ஷீவீதீமீ) தேர்வு எழுதுகின்றனர். மொத்தம் 151 தேர்வு மையங்களில் இப்பொதுத்தேர்வு நடைபெறுகிறது.

இத்தேர்வுகள் முறையாக நடைபெறுவதைக் கண்காணிக்கும் வகையில் வினாத்தாள் கட்டுக் காப்பாளர்கள். 151 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 151 துறை அலுவலர்கள் என 300க்கும் மேற்பட்ட பறக்கும் படை அலுவலர்கள், 3,100க்கும் மேற்பட்ட அறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்வுப் பணியாளர்கள் என பல்வேறு நிலைகளில் 3,500 க்கும் மேற்பட்ட தேர்வுப் பணியாளர்கள் இப்பணிகளைக் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், இப்பொதுத்தேர்வை முறையாகக் கண்காணித்து நடத்திடத் தேவையான அறிவுரைகள் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள், விடைத்தாள் சேகரிப்பு மையங்கள், விடைத்தாள் மதிப்பீட்டு முகாம்கள் மற்றும் தேர்வு மையங்களுக்கு ஆயுதம் தாங்கிய காவல்துறை பாதுகாப்பு வசதியினை ஏற்பாடு செய்திடவும், தேர்வர்கள் உரிய நேரத்தில் தேர்வு மையங்களுக்கு செல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்திடவும், தடையில்லா மின்சார வசதிகள் வழங்கிடுவதை உறுதி செய்திடும் வகையில் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் வருகின்ற 05.03.2025 முதல் 27.03.2025 வரை நடைபெறவுள்ளது. இதில் சேலம் மாவட்டத்தில் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் 19,142 மாணவர்கள், 20,515 மாணவிகள் என மொத்தம் 39,657 பேர் தேர்வு எழுது உள்ளனர்.

பொதுத்தேர்வுகளை எழுதும் மாணவ, மாணவிகள் சிறப்பான முறையில் தன்னம்பிக்கையுடன் தேர்வுகளை எழுதி வெற்றிபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபீர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# ராஷ்டிய புரஸ்கார் விருது தேர்வு முகாம்




தென்காசி, மார்ச் 3–

தென்காசி வருவாய் மாவட்டத்தில் உள்ள சங்கரன் கோவில் சாரண மாவட்டத்தின் பாரத சாரண சாரணிய இயக்கத்தின் 2024 –2025 கல்வியாண்டுக்குரிய ஆளுநர் விருதுக்கான ராஷ்டிய புரஸ்கார் விருது தேர்வு முகாம் ஆலமநாயக்கர்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் வைத்து, இம்மாவட்டத்தின் சாரண, சாரணியருக்கு தனித்தனியே முகாம் அமைத்து 3 நாட்கள் நடைபெற்றது. இத்தேர்வு முகாமினை தென்காசி முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி, இடைநிலை, தனியார்) ஆகியோர் மற்றும் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா அனைவரின் வாழ்த்துகள் பெற்று, சங்கரன்கோவில் மாவட்டத்தின் சாரண முதன்மை ஆணையாளர் பழனிச் செல்வம், முதல்வர் கோமதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முன்னிலையில், மாவட்டச்செயலாளர் பிரேம் குமார் வரவேற்புரை வழங்கிட, இத்தேர்வு முகாமில் பல பள்ளிகளில் இருந்து விண்ணப்பித்த சாரணர்கள் 93 பேர், சாரணியர்கள் 35 பேர் மொத்தம் 128 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாநில தலைமையகத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட முதன்மை தேர்வுக் குழுவினர்கள் முதன்மை தேர்வாளர்கள் ஏஎல்டியின் பிரான்சிஸ் அலாயிஸ் சாரணர்களுக்கும், உமா முருகன் சாரணியர்களுக்கும் உதவித்தேர்வர்கள் தட்சணமுர்தேர்வுத்தி, செந்தில் முருகன், ராமர் மற்றும் மற்றும் முத்துலட்சுமி இணைந்து தேர்வு முகாமை சிறப்பாக வழி நடத்தினார்கள் இம்முகாமில் கலந்துகொண்ட அனைவரும் சீருடையில் மூன்று நாட்கள் முழுமையாக முகாமில் தங்கினர். முகாமில் மூன்று வேளைகள் சுவையான உணவும் இடைவேளைகளில் டீ, பிஸ்கெட் வழங்கப்பட்டது. இம்முகாமினை சிறப்பான முறையில் மாவட்ட பொருளாலர் மூக்கையா, செய்து கொடுத்தார்கள். மேலும், பயிற்சி ஆணையார் சிவசுப்பிரமணியன், சாரண ஆசிரியர்கள் வேணுகோபால், அருணகிரி, அருண், ஆபிரகாம் மனோகர், சுப்பிரமணியன் மற்றும் சாரணஆசிரியைகள் அனைவரும் இணைந்து சிறப்பாக வழி நடத்திட, சாரண செயலாளர் வீ.பிரேம்குமார் அவர்கள், “அடை மழையிலும் , விடா முயற்சியில் கூடாரம் அமைத்து; அதில் தங்கி மகிழ்ந்து, கவனம் சிதறாமல், தம் தேர்வினை முடித்து கொடுத்தார்கள். இத்தேர்வுமுகாம் சிறப்படைய முழு உட்சாகத்துடன் இயங்கி வெற்றி பெற வைத்த எம் சாரண, சாரணிய செல்வங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் “ என்று சொல்லி நன்றி கூறினார்கள். இத்துடன் இராஷ்டிய புரஸ்கார் தேர்வு முகாம் நிறைவு பெற்றது.

# மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் தீமிதி திருவிழா



மேல்மலையனூர், மார்ச் 3–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோயில் பிரசித்தி பெற்ற அம்மன் தலமாகும். வருடம் தோறும் நடை பெறும் மாசி பெருவிழா கடந்த பிப்ரவரி 26 மகா சிவராத்திரி அன்று இரவு கொடி ஏற்றத்துடன் துவங்கியது 13 நாட்கள் நடைபெறும் மாசி பெருவிழாவில் மயான கொள்ளை கடந்த 27ஆம் தேதியன்று விமர்சையாக நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தீமிதி விழாவிற்காக அக்னி குளத்திலிருந்து அம்மன் வீதி உலா புறப்பாடு துவங்கி கோயில் வடக்கு வாசல் எதிரே உள்ள அக்னிகுண்டம் அருகே அம்மனுக்கு அபிஷேகம், மகா தீபாராதனை நடைபெற்றது.

இதனை தொடர்ந்து அக்னி குண்டத்தில் கோயில் பூசாரிகள் முதலில் இறங்கிய பின் பக்தர்கள் தீமிதிக்க துவங்கினர். தொடர்ந்து ஐந்து நாட்கள் விரதம் இருந்த பின் தீமி தித்து பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினார்கள்.

இந்நிகழ்வுக்காக தமிழக பக்தர்கள் மட்டுமின்றி வெளி மாநிலத்திலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை புரிந்து அம்மனை வகைப்பட்டு தீமிதித்தனர்.

தீ மிதிக்கும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக ஆம்புலன்ஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டது. மேலும் தீயணைப்பு வீரர்களும், போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் பக்தர்களின் வருகைக்காக தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டது. விழா ஏற்பாட்டினை கோயில் உதவி ஆணையர் ஜீவானந்தம், அறங்காவலர் குழு தலைவர் மதியழகன் மற்றும் அறங்காவலர்கள் சுரேஷ், சரவணன், ஏழுமலை, பச்சையப்பன், வடிவேல், சந்தானம் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்திருந்தனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● திங்கள் ● மார்ச் 3, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# முதல்வர் மருந்தகம் சேமிப்பு கிடங்கை ஆட்சியர் ஆய்வு



திருநெல்வேலி மாவட்டம், சந்திப்பு பகுதியில் உள்ள பேரங்காடி வளாகத்தில் முதல்வர் மருந்தகம் சேமிப்பு கிடங்கினை மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# மருத்துவமனை கட்டுமான பணிகளை எம்பி ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சிப்காட் பகுதியில், புதிதாக கட்டப்பட்டு வரும் இஎஸ்ஐசி மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# கொம்பாக்கம் பேட் மாதா கோவில் வீதியில் புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணி

## எதிர்க்கட்சி தலைவர் சிவா தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி, மார்ச் 3–**

புதுச்சேரி அரசின் பொதுப்பணித்துறை பொது சுகாதாரக் கோட்ட குடிநீர் பிரிவு மூலம் வில்லியனூர் சட்டமன்ற தொகுதி புதுச்சேரி நகராட்சிக்கு உட்பட்ட கொம்பாக்கம் பேட் மாதா கோவில் வீதியில் ரூ.4 லட்சம் மதிப்பில் புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நிகழ்ச்சி இன்று காலை நடந்தது.

இந்த நிகழ்ச்சியில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிவா கலந்துகொண்டு குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை குடிநீர் பிரிவு இளநிலைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன், ஊர் முக்கியஸ்தர்கள் கபிரியல், செல்வநாயகம், அமலர், கதிரவன், அருள்மணி, நாகராஜ், சேகர், சக்திவேல், அலிஸ்தர், சத்யராஜ், ஜெனிஷ், லியான்ஸ், கண்ணன், தூஷன் மற்றும் திமுக பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி, அவைத்தலைவர் ஜலால் அணிப், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், மற்றும் ஜனா, ராஜி, சேகர், மிலிட்டரி முருகன், முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கஞ்சா விற்ற 3 நபர் கைது

**காரைக்கால், மார்ச் 3–**

காரைக்கால் சந்தை திடல் அருகே கஞ்சா விற்ற 3 நபரை காரைக்கால் நகர போலீசார் கைது செய்தனர். காரைக்கால் பிள்ளைத்தெரு வாசல் வாஞ்சி ஆறு சந்தை திடல் அருகே, சிலர் அரசால் தடை செய்யப்பட்ட போதை புகையிலை பொருட்கள் விற்பதாக, காரைக்கால் நகர போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பெயரில் போலீசார் அப்பகுதிக்கு விரைந்து சென்ற பொழுது, 3 நபர்கள் போலீசாரை பார்த்ததும் தப்ப முயன்றனர். போலீசார் 3 பேரையும் மடக்கி பிடித்து விசாரணை செய்தபொழுது, லெமர் நகர் சேர்ந்த அந்துவான் தாஸ் (25), எம்எம்ஜி நகரை சேர்ந்த சீனிவாசன் (26), சமத்துவபுரம் பகுதியை சேர்ந்த ரகுல் சுக்லா (19) ஆகியோர் என்பதும், ஒவ்வொருவருடைய பேண்ட் பாக்கெட்டில் தலா 20 கிராம் என 60 கிராம் கஞ்சா பொட்டலங்கள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து போலீசார் 3 பேரையும் கைது செய்து, கஞ்சா பொட்டலங்களை பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு சுமார் ரூபாய் பத்தாயிரம் என கணக்கிடப் பட்டுள்ளது.

## ஏழ்மை நிலையில் உள்ள மருத்துவம் பயின்றவர்கள்

# தொழில் முனைவோர்களாக உருவாகிட நல்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்த முதல்வர்

## விழுப்புரம் மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி






**விழுப்புரம், மார்ச் 3–**

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மற்றொரு வரலாற்று சிறப்பு நிகழ்வாக, அனைவருக்கும் குறைந்த விலையில் பொதுப்பெயர் (ஜெனரிக் மருந்துகள் மற்றும் பிற மருந்துகள்) கிடைக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில், 15.08.2024 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவில், தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் திறக்கப்படும் என அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

அதனடிப்படையில், கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில், கூட்டுறவுத்துறை சார்பில், தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்தில், கூட்டுறவுத்துறை சார்பில், சாலை அகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் குத்துவிளக்கேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுள்ள B.Pharm /D.Pharm சான்று பெற்றவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகம் அமைக்க இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு அதில் விழுப்புரம் மாவட்டத்தில் 22 கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 01 தொழில் முனைவோர் என மொத்தம் 23 முதல்வர் மருந்தகங்கள் அமைத்திட ஒப்புதல் பெறப்பட்டது.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டத்தில், கூட்டுறவுத்துறை சார்பில், சாலை அகரம், கண்டமங்கலம், மேல்வைலாமூர், விழுக்கம், சித்தலிங்கமடம், அரகண்டநல்லூர், இரும்பை, மரக்காணம், விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, விக்கிரவாண்டி, கோணை, அன்னியூர், காணை, சாத்தாம்பா, ஆவணிப்பூர், வளவனூர், நேமூர், கண்டாச்சிபுரம், கெடார், ஜி. செம்மேடு, ஆலங்குப்பம், செஞ்சி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக முதல்வர் மருந்தகங்களும், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில், தொழில் முனைவோர் திவ்யா சின்னகிருஷ்ணன் வாயிலாக முதல்வர் மருந்தகம் அமைக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மருந்தகம் அமைக்கும் தொழில்முனைவோருக்கு அரசு மானியம் ரூ.3.00 லட்சம் வழங்கப்படுகிறது. இதில் ரொக்கமாக ரூ.1.50 லட்சம் முதல்வர் மருந்தகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளான ரேக்குகள், குளிர்சாதனப்பெட்டி, ஏசி மற்றும் மருந்துகள் வைப்பதற்கான பெட்டிகள் நிறுவுவதற்கு வழங்கப்படுகிறது. மேலும் ரூ.1.50 லட்சம் மதிப்பிற்கு மருந்துகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதல்வர் மருந்தகம் அமைக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு மானியம் ரூ.2.00 லட்சம் வழங்கபடுகிறது இதில் ரொக்கமாக ரூ.1.00 லட்சம் முதல்வர் மருந்தகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளான ரேக்குகள், குளிர்சாதனப்பெட்டி, ஏசி மற்றும் மருந்துகள் வைப்பதற்கான பெட்டிகள் நிறுவுவதற்கு வழங்கப்படுகிறது. மேலும் ரூ.1.00 லட்சம் மதிப்பிற்கு மருந்துகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர், ஏழை, எளிய மக்களுக்கு தரமான உயர்தர மருந்துகளை பெற்று நோயற்ற வாழ்க்கையினை வாழ்ந்திட உயர்ந்திட வேண்டும் என்ற உண்ணத நோக்கத்தோடு முதற்கட்டமான 1000 மருந்தகங்களை திறந்து வைத்துள்ளார்கள். இந்த முதல்வர் மருந்தகம் வாயிலாக, நீரிழிவு, ரத்தக்கொதிப்பு, இருதய மற்றும் நரம்பு சம்மந்தமான அனைத்து நோய்களுக்குமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்கப்பெறும். இத்தகைய உன்னத திட்டத்தின் மூலம், ஒருவர் மாதம் ஒன்றுக்கு சுமார் 1000 ரூபாய் அளவிற்கு சேமிக்கலாம். எனவே, பொதுமக்கள் அருகாமையிலுள்ள முதல்வர் மருந்தகத்தில் தங்களுக்கு தேவையான மருந்துகளை மருத்துவர் ஆலோசனையின்படி வாங்கி பயன்பெற வேண்டும்.

தற்பொழுது, முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்த எண்ணிக்கையில் கூடுதல் முதல்வர் மருந்தகங்கள் திறக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பி.பார்ம் மற்றும் டி.பார்ம் மருத்துவ படிப்பு முடித்தவர்கள் தொழில் முனைவோர்களாக விளங்கிட அடுத்தடுத்து தொடங்கப்பட உள்ள முதல்வர் மருந்தகம் தொடங்கிட விண்ணப்பித்து பயன்பெறலாம்.

முதல்வர் மருந்தகத்தில் சர்க்கரை நோய்க்கு மருந்து வாங்கி பயன்பெற்று வரும் ராஜேந்திரன் என்பவர் தெரிவிக்கையில், நான் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், வி.அகரம் ஊராட்சி பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு கடந்த சில வருடங்களாக சர்க்கரை நோய் பாதிப்பு ஏற்பட்டு தனியார் மருந்தகத்தில் மருந்துகள் வாங்கி சாப்பிட்டு வந்தேன். இதனால் எனக்கு மாதந்தோறும் சுமார் 2000 க்கும் அதிகமாக செலவு ஏற்படும். நான் கூலி வேலை பார்த்து வருவதால், எனக்கு போதுமான வருமானம் இல்லாத காரணத்தினால் அவ்வப்பொழுது மருந்து வாங்கி சாப்பிட முடியாத நிலை ஏற்படும். இச்சமயத்தில்தான், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்களை திறந்து வைப்பதாகவும், இம்மருந்தகத்தில் குறைவான விலையில் உயர்தர மருந்துகள் கிடைக்கும் என்று கேள்விப்பட்டு, முதல்வர் மருந்தகத்தில் சர்க்கரை நோய்க்கான மருந்து மற்றும் மாத்திரைகளை வாங்கியபோது, சுமார் 1200 ரூபாய் அளவிற்கு குறைவாக மருந்துகளை வாங்கினேன். இதன் மூலம் எனக்கு மாதந்தோறும் மருந்து மற்றும் மாத்திரைகள் வாங்குவதற்கான செலவு 800 மிச்சப்படும். மேலும், நாள்தோறும் முறையாக மருந்து எடுத்துக்கொள்ளும் நிலையும் உருவாகும் என்பதால் நான் ஆரோக்கியமாக வாழக்கூடிய சூழல் அமையும் என்பதில் மிக்க மகிழ்ச்சியாக உள்ளேன். எனவே, முதல்வர் மருந்தகம் திட்டத்தினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் மருந்தகம் தொடங்கி தொழில் முனைவோர் திவ்யா சின்னகிருஷ்ணன் தெரிவிக்கையில், நான் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், பெரியசெவலை ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் எம்.பி.பி.எஸ் படித்து முடித்துள்ளேன். எனக்கு சுயமாக மருத்துவமனை துவங்கி மருத்துவம் பார்க்க வேண்டும் என்று ஆவல். ஆனால் மருத்துவமனைக்கு அத்தியாவசியத் தேவை மருந்தகம் ஆகும். மருந்தகம் அமைப்பதற்கு தேவையான போதிய அளவில் நிதி ஆதாரம் எங்களிடம் இல்லை. இத்தகைய நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு முதல்வர் மருந்தகம் திறக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

முதல்வர் மருந்தகம் தொடங்குவதற்கு மருத்துவம் பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தார்கள். உடனடியாக கூட்டுறவுத்துறை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு இணைய வழியில் விண்ணப்பித்தேன். ஓரிரு நாட்களில் மருந்தகம் தொடங்குவதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. இதற்கு தேவையான நிதியும் வழங்கப்பட்டது. முதற்கட்டமாக ரூ.1.5 லட்சம் விடுவித்து, மருந்தகம் அமைப்பதற்கான உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொண்டேன். அடுத்ததாக ரூ.1.5 லட்சம் மூலம் மருந்துகள் கிடைக்கப்பெற்று தற்பொழுது மருந்தகம் சிறப்பான முறையில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. முதல்வர் மருந்தகத்தின் சிறப்பு என்னவென்றால் கூட்டுறவுத்துறை வாயிலாகவே, மருந்துகள் எங்களுக்கு கடைக்கே வந்து வழங்கப்படுகிறது. இதனால் போக்குவரத்து செலவு மற்றும் வாகனம் செலவு மிச்சப்படுகிறது. இது மட்டுமல்லாமல், ஒளிவுமறைவில்லாமல் மருந்தகம் சிறப்பாக நடத்திட பெரும் உதவியாக உள்ளது. முதல்வர் மருந்தகத்தின் சிறப்பு குறைந்த விலையில் உயர்தர மருந்துகள் வழங்கப்படுவதாகும். இதனால் நான் தரமான மருந்துகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறோம் என்ற மகிழ்ச்சி என்னில் ஏற்படுவதோடு, மனநிறைவோடு உள்ளேன். எனவே, முதல்வர் மருந்தகம் தொடங்கி எங்களைப்போன்ற ஏழ்மை நிலையில் உள்ள மருத்துவம் பயின்றவர்களும் தொழில் முனைவோர்களாக உருவாகிட நல்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனைத்து தரப்பு மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.




தொகுப்பு:–
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
விழுப்புரம் மாவட்டம்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007


# பிளஸ்2 பொதுத்தேர்வு தொடங்கியது





# நடிகர் சிவாஜி கணேசன் வீட்டை ஜப்தி செய்ய நீதிமன்றம் உத்தரவு

# சீமான் மீதான வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை-சுப்ரீம் கோர்ட்




# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com



• 3-3-2025 திங்கள்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்